திருவிவிலிய ஞாயிறு - 25.09.2022

இறை இயேசுவில் அன்பிற்கினியவர்களே!

வார்த்தையால் வாழ்வளிக்கும் இறைவனின் அருளும் உடனிருப்பும் என்றும் உங்களோடு இருப்பதாக.

மானுட வாழ்வு என்பது அடுத்தவரோடு கொண்டிருக்கும் உறவுத் தோழமையால் வளமடைகிறது. தனித்தீவாக வாழ மனிதர் எத்தனிக்கும் போது உறவுச் சங்கிலியிருந்து விடுபட்டவர்களாக மாறிவிடுவர். ஆகவே ஒன்றிணைந்து பயணிக்கும் போதுதான் வாழ்வு அர்த்தம் பெறுகிறது. இப்பயணத்தில் நாம் வேடிக்கை மனிதர்களாய் ஒதுங்கி நிற்காமல் ஈடுபாட்டு மனிதர்களாய் உடன் வாழும் மனிதரின் வாழ்வில் பங்கேற்க முன் வர வேண்டும். விளிம்பு நிலையில், கண்டு கொள்ளாமல் புறக்கணிக்கப்பட்டு வாழும் சாமானியரின் வாழ்வில் நாம் பங்கேற்கிறோம் என்பதையும் அவர்களுக்கான பங்கேற்பையும் திருஅவையிலும், சமூகத்திலும் உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமும் கடவுளின் அழைப்புமாகும்.

திறந்த மனதுடன் நலமானக் கூறுகளை உள்வாங்கும் மானுடச் சமூகம் எப்போதும் மாற்றத்தை நேசிக்கும். இறுகிப்போன இதயம் புதிய எண்ணங்களை, புதிய பார்வைகளை ஏற்க தயங்கும் நம் சமூகச் சூழலில் "காலத்தின் அறிகுறிகளை" (மத் 16:3) உன்னிப்பாக உற்று நோக்குவதும், உருக்குலைந்த மானுடச் சமூகத்திற்கு உருக்கொடுப்பதுவுமே வாழ்வின் அர்த்தத்தைச் செழுமையாக்கும். எனவேதான் திருஅவைக்குள்ளும் சமூகத்திலும் காணக்கிடக்கும் காலத்தின் அறிகுறிகளை அக்கறையுடன் கண்டுணர்ந்து, சமூகம் எழுப்பும் அவலக் குரல்களுக்குப் பதிலிறுப்பு வழங்க வேண்டியது திருமுழுக்குப் பெற்ற அனைவரின் கடமையாகும். பலவீனங்களை ஏற்றுக்கொள்ளும் சமூகமாகத் தனது தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் திருஅவை காலத்தின் அறிகுறிகளைக் கண்டுணர்ந்து தன்னைப் புதுப்பிக்க வேண்டும் எனும் திருத்தந்தையின் அழைப்பை ஏற்று காலத்தின் அறிகுறிகள் – மனமாற்றத்தின் தேவை என்பதை உணர்ந்து, விளிம்புநிலை மாந்தரின் குரல்களும் திருஅவையால் அங்கீகரிக்கப்படுமென்ற கருத்தாக மாறிடவேண்டும்.

இணைந்து பயணித்தல் - திருவிவிலிய அடித்தளம்

திருஅவை அன்பினால் வழிநடத்தப்படும் குடும்பம். ஆகவேதான் 'கடவுள் மானிடரை... ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்' (தொநூ 1:27). இணைந்து பயணித்தல் என்பது மானுடத்தின் அருள்வாழ்வு பயணத்திற்கான அறைகூவல் என்பதைப் படைப்பின் தொடக்கத்திலேயே வெளிப்படுத்திய கடவுள் பின்னாளில் ஆபிரகாம் (தொநூ 12:17,22) மற்றும் மோசே (விப 19:24) இவர்களோடு உடன்படிக்கை செய்து இஸ்ரயேல்

இனத்தாரை இறைமக்கள் சமூகமாக ஒருங்கிணைத்தார். அறநெறி பிறழ்ந்து, உண்மைக் கடவுளை மறந்து வழி தவறிச் சென்றபோதெல்லாம் கண்டுகொள்ளாதக் கடவுளாக அல்லாமல் நீதித்தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள் இவர்களால் வழிநடத்தப்பட்டு இணைந்து பயணிப்பதற்கான நெறிமுறைகளை வாழ்வாக்கும் இறைச்சமூகமாகக் கட்டியெழுப்பினார்.

மூவொரு கடவுளாய் இணைந்து பயணித்து மானுட விடுதலைக்காய் மனிதரான இயேசு இறையாட்சிப் பணியில் தனியாளாகச் செயல்படவில்லை. இணைந்து பயணிக்கும் சீடத்துவச் சமூகத்தைக் கட்டியெழுப்பினார் (மாற் 6:6–13). எனவேதான் "நான் அவர்களோடு இணைந்திருக்கவும் நீர் என்மீது கொண்டிருக்கும் அன்பு அவர்கள்மீது இருக்கவும்..." (யோவா 17:26) எனும் இறைவேண்டலை அவரால் எழுப்ப முடிந்தது.

தொடக்கத் திருஅவை - மாமன்ற முன்மாதிரி

"நம்பிக்கைக்கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர்..." (திப 4:32) எனும் தொடக்கத் திருஅவை நம்மைக் கிறிஸ்துவின் தலைமையிலும் நிழலிலும் ஒருவர் மற்றவரின் கரங்களைப் பிடித்துப் பயணம் செய்ய உத்வேகம் அளிக்கிறது. 'மனக்கசப்பும், முணுமுணுப்பும் (திப 6:1) எழுந்தபோதும், கருத்து வேறுபாடுகளால் எருசலேம் சங்கம் கூட்டப்பட்டபோதும் (திப 15:1–19) தீர்வுகளை நோக்கி நகர்ந்து இணைந்து பயணிப்பதற்கான சாத்தியக் கூறுகளைத் தெளிந்து தேர்ந்தது இக்காலத்திற்கு நாம் கற்றுக்கொள்ளும் வாழ்வுப் பாடம். பிற இனத்தார் என கொர்னேலியுவைத் தவிர்த்தபோது தூய ஆவியாரின் தூண்டுதலால் பேதுரு "இயேசு கிறிஸ்து அனைவருக்கும் ஆண்டவர்" (திப 10:26) என முழக்கமிட்டு விளிம்புநிலை மாந்தரும் இறையாட்சியின் சொந்தம் என்பதை உரக்கக் கற்றுத் தருகிறார்.

காலம் விடுக்கும் அறைகூவல் - இறைவார்த்தை ஒளியில்

"எல்லா மானிடரும் நிறைவாக வாழ வேண்டும்" (யோவா 10:10); அதற்கு எதிரான அனைத்து அநீதிகளும், ஆதிக்கங்களும் ஒழிக்கப்பட வேண்டும் எனும் இறையாட்சி முழக்கமிட்ட இயேசுவின் நீட்சியாக நாம் மாற வேண்டும். "திருமுழுக்குப் பெற்ற அனைவரும் மாண்பிலும் செயல் பொறுப்பிலும் சமமானவர்களே" எனப் புதிய திருஅவைச் சட்டம் (208) முழக்கமிட்டதை ஏற்று திருஅவை இயேசுவின் உண்மையான இறையாட்சி இயக்கமாகப் பல்வேறு தளங்களில் இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்வது காலம் விடுக்கும் அறைகூவல்.

உறவுச் சமூகமாக ஒன்றிணைந்து உரையாடல் வழி, நலமான கருத்துக்களுக்குச் செவிமடுப்போம். உயிரார்ந்த ஒன்றிப்பு உறவுக் குழுமத்தை உருவாக்குவோம். இணைந்த உறவுப் பயணம் தான் மானுடத்தின் எழுச்சியாக வரலாற்றில் மிளிர்ந்தது. இறையாட்சி சமூகத்தைக்

கட்டியெழுப்பும் பணியில் புளிக்காரமாகச் செயல்படும் திருஅவையும் இணைந்து பயணித்தால் மட்டுமே மாற்றங்களைக் கொணர முடியும் என்பது தனது அனுபவமாகக் கொண்டு இயங்கி வருகிறது. ஆதிக்க மனநிலை மறுத்து அடிமட்ட உணர்வுகளை உள்வாங்கி இயங்கும் அமைப்பே விளிம்புநிலை மாந்தருக்கானது என்பது உரக்கச் சொல்லும் காலச் சூழலுக்குள் திருஅவை தன்னை நிறுத்தி மாற்றத்தைத் தேடி பயணிக்க நம்மை அழைக்கிறது.

திருவிவிலிய வாரம்

'கனவுகளை விதைக்கவும், இறைவாக்குகளை எடுத்துரைக்கவும், எதிர்நோக்கினை வளர்க்கவும், நம்பிக்கையை ஊக்குவிக்கவும், காயங்களைக் குணமாக்கவும், உறவுகளை ஒன்றிணைக்கவும், நம்பிக்கையை விடிய வைக்கவும், ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்ளவும், அறிவூட்டும், இதயத்திற்கு இதமான கரங்களை வலுப்படுத்தும் வளங்களை உருவாக்கவும் இறைவார்த்தை ஒளியால் தூண்டப் பெற்று மாமன்றத்தின் இலட்சிய முதன்மைகளை வாழ்வாக்கிட 19.09.2022 முதல் 25.09.2022 வரையிலான திருவிவிலிய வாரத்தைப் பொருளுள்ள வகையில் சிறப்பிப்போம்.

இந்த ஆண்டின் சிறப்புச் செயல்பாடாகத், திருவிவிலியப் பயிற்சி அளித்து திருவிவிலியப் பணிக்குழுவைப் பங்குகளில் உருவாக்குவோம். இந்த மாதம் முதல் 2023 செப்டம்பர் வரை திருவிவிலியப் பயிற்சிகளைப் பங்குகளில் ஏற்பாடு செய்ய ஏதுவாக மறைமாவட்ட திருவிவிலியப் பணிக்குழு வழங்கும் குறிப்புகளைப் பின்பற்றுவோம். பயிற்சியின் நிறைவில் பங்கேற்றோருக்கான சான்றிதழ் வழங்கப்படும். பங்கு, மறைவட்டம் மற்றும் மறைமாவட்ட அளவில் திருவிவிலியப் பணிக்குழுவை வலுப்படுத்தி இறைவார்த்தையால் ஒளியூட்டப் பெற்று மாற்றத்தை நோக்கி இணைந்து பயணிப்போம். நம் பங்குகளில் திருவிவிலிய வார சிறப்பு நிகழ்வுகளை இணைந்து கொண்டாடுவோம்.

வாக்கு மனிதர் ஆன இறைவனின் அருளும், வார்த்தையாம் இறைவனைச் சுமந்த அன்னை மரியாவின் பரிந்துரையும் என்றும் உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

+ **ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்

குறிப்பு : திருவிவிலிய ஞாயிறு காணிக்கை பிரித்து மறைமாவட்ட பொருளரிடம் ஒப்படைத்து ரசீது பெற்றுக்கொள்ளவும்.